ஶ்ரீ:

ஶ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

ஶ்ரீமாந் வேங்கடநாத₂ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத₃ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித₄த்தாம் ஸத₃ா ஹ்ருதி₃ ॥

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

# ॥ தவள இளம்பிறை ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஶ்ரீ ரங்க₃ராமாநுஜ மஹாதே₃ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ தவள இளம்பிறை ॥

## திருக்குறுங்குடி - 1

‡தவளவிளம் பிறை துள்ளு முந்நீர்⋆
    தண் மலர்த் தென்றலோடன்றில் ஒன்றித்
துவள⋆ என் நெஞ்சகம் சோர ஈரும்⋆
    சூழ் பனி நாள் துயிலாதிருப்பேன்⋆
இவளும் ஓர் பெண்கொடி என்றிரங்கார்⋆
    என் நலம் ஐந்து முன் கொண்டு போன⋆
குவளை மலர் நிற வண்ணர் மன்னு⋆
    குறுங்குடிக்கே என்னை உய்த்திடுமின் (1)

தாதவிழ் மல்லிகை புல்லி வந்த⋆
    தண் மதியின் இள வாடை இன்னே⋆
ஊதை திரிதந்துழறி உண்ண⋆
    ஓர் இரவும் உறங்கேன்⋆ உறங்கும்
பேதையர் பேதைமையால் இருந்து⋆
    பேசிலும் பேசுக பெய்வளையார்⋆
கோதை நறு மலர் மங்கை மார்வன்⋆
    குறுங்குடிக்கே என்னை உய்த்திடுமின் (2)

காலையும் மாலை ஒத்துண்டு⋆ கங்குல்
    நாழிகை ஊழியில் நீண்டுலாவும்⋆
போல்வதோர் தன்மை புகுந்து நிற்கும்⋆
    பொங்கழலே ஒக்கும் வாடை சொல்லில்⋆
மாலவன் மா மணி வண்ணன் மாயம்⋆
    மற்றும் உள அவை வந்திடாமுன்⋆
கோல மயில் பயிலும் புறவின்⋆
    குறுங்குடிக்கே என்னை உய்த்திடுமின் (3)

www.prapatti.com

கரு மணி பூண்டு வெண்ணாகணைந்து⋆
    கார் இமில் ஏற்றணர் தாழ்ந்துலாவும்⋆
ஒரு மணி ஓசை என்னுள்ளம் தள்ள⋆
    ஓர் இரவும் உறங்காதிருப்பேன்⋆
பெரு மணி வானவர் உச்சி வைத்த⋆
    பேர் அருளாளன் பெருமை பேசி⋆
குரு மணி நீர் கொழிக்கும் புறவின்⋆
    குறுங்குடிக்கே என்னை உய்த்திடுமின் (4)

திண் திமில் ஏற்றின் மணியும்⋆ ஆயன்
    தீங்குழல் ஓசையும் தென்றலோடு⋆
கொண்டதோர் மாலையும் அந்தி ஈன்ற⋆
    கோல இளம்பிறையோடு கூடி⋆
பண்டைய வல்ல இவை நமக்குப்⋆
    பாவியேன் ஆவியை வாட்டம் செய்யும்⋆
கொண்டல் மணி நிற வண்ணர் மன்னு⋆
    குறுங்குடிக்கே என்னை உய்த்திடுமின் (5)

எல்லியும் நன் பகலும் இருந்தே⋆
    ஏசிலும் ஏசுக ஏந்திழையார்⋆
நல்லர் அவர் திறம் நாம் அறியோம்⋆
    நாண் மடம் அச்சம் நமக்கிங்கில்லை⋆
வல்லன சொல்லி மகிழ்வரேலும்⋆
    மா மணி வண்ணரை நாம் மறவோம்⋆
கொல்லை வளர் இள முல்லை புல்கு⋆
    குறுங்குடிக்கே என்னை உய்த்திடுமின் (6)

செங்கண் நெடிய கரிய மேனித்⋆
    தேவர் ஒருவர் இங்கே புகுந்து⋆ என்
அங்கம் மெலிய வளை கழல⋆
    ஆதுகொலோ என்று சொன்ன பின்னை⋆
ஐங்கணை வில்லி தன் ஆண்மை⋆ என்னோ-
    டாடும் அதனை அறிய மாட்டேன்⋆

கொங்கலர் தண் பணை சூழ் புறவின்⋆
    குறுங்குடிக்கே என்னை உய்த்திடுமின் (7)

கேவலம் அன்று கடலின் ஓசை⋆
    கேண்மின்கள் ஆயன் கை ஆம்பல் வந்து⋆ என்
ஆவி அளவும் அணைந்து நிற்கும்⋆
    அன்றியும் ஐந்து கணை தெரிந்திட்டு⋆
ஏவலம் காட்டி இவன் ஒருவன்⋆
    இப்படியே புகுந்தெய்திடாமுன்⋆
கோவலர் கூத்தன் குறிப்பறிந்து⋆
    குறுங்குடிக்கே என்னை உய்த்திடுமின் (8)

சோத்தென நின்று தொழ இரங்கான்⋆
    தொன்னலம் கொண்டெனக்கின்றுகாறும்⋆
போர்ப்பதோர் பொற்படம் தந்து போனான்⋆
    போயின ஊர் அறியேன்⋆ என் கொங்கை
மூத்திடுகின்றன⋆ மற்றவன் தன்
    மொய்யகலம் அணையாது வாளா⋆
கூத்தன் இமையவர் கோன் விரும்பும்⋆
    குறுங்குடிக்கே என்னை உய்த்திடுமின் (9)

‡செற்றவன் தென்னிலங்கை மலங்கத்⋆
    தேவ பிரான் திரு மா மகளைப்
பெற்றும்⋆ என் நெஞ்சகம் கோயில் கொண்ட⋆
    பேர் அருளாளன் பெருமை பேசக்
கற்றவன்⋆ காமரு சீர்க் கலியன்⋆
    கண்ணகத்தும் மனத்தும் அகலாக்
கொற்றவன்⋆ முற்றுலகாளி நின்ற⋆
    குறுங்குடிக்கே என்னை உய்த்திடுமின் (10)

‖ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம் ‖

www.prapatti.com